## பத்திரிக்கைச் செய்தி

## இறக்குமதி செய்யப்பட்ட சிமிண்ட் மூட்டைகளை முறைகோடாக அதிக விலைக்கு விற்ற குற்றத்திற்காக முன்னாள் ஊழியர்களுக்கு சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை அலுவலகத்தில் பணிபுரிந்த 1) திரு.நாராணய சங்கரன், முன்னாள் மார்க்கெட்டிங் அலுவலர், தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை, 2)திரு.என்.ராஜகோபாலன், முன்னாள் மார்க்கெட்டிங் மேனேஜரின் நேர்முக உதவியாளர் 3) திரு. பி.தாமோதரன், முன்னாள் அக்கவுணட்ண்ட், 4) திரு.எஸ்.ராமகிருஷ்ணன், முன்னாள் இளநிலை உதவியாளர், மற்றும் தனி நபர்களான 5) திரு.பி.சுந்தரராஜன், 6) திரு.டி.தனசிங், 7) திரு,செல்வராஜ், 8) திரு,எ.லாரன்ஸ் என்கிற சுந்தர் மற்றும் 9) திரு.எ.வைரவநாதன் ஆகியோர் குற்ற சதியில் ஈடுபட்டு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட் மூட்டைகளை பயனாளிகளுக்கு விநியோகம் செய்வதில் முறைகேடு செய்ததாக அவர்கள் மீது கடந்த 25.06.1984 ஆம் ஆண்டு, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை, சிறப்பு புலனாய்வு பிரிவில் குற்ற எண். 1/AC/84/SIC, u/s.120 B r/w.467, 471, 468, 477(A), 420, 109 IPC and Sec 5(2) r/w. 5(1)(d) of Prevention of Corruption Act, 1947 ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசு அரசாணை எண்.819 தொழில் துறை, நாள் 06.03.1982 கண்ட ஆணைப்படி வெளிநாட்டிலிருந்து சிமெண்ட் இறக்குமதி செய்வதற்கு தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், ஐ ஒரு நிறுவனமாக அரசு நியமித்தது. அந்த அரசாணையின்படி 1982 மற்றும் 1983 ஆகிய ஆண்டுகளில் வடகொரியா மற்றும் தென்கொரியா நாடுகளிலிருந்து சிமெண்ட்டுகளை தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை இறக்குமதி செய்தது. பின்னர் தமிழ்நாடு சிமெண்ட்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட், சென்னை பொதுமக்களிடமிருந்து 03.03.1983 முதல் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அங்கீகரிக்கப்பட்ட வரைப்படங்களுடன் பெற ஆரம்பித்தது. 1983 பிப்ரவரி மாதம் முதல் 1983 செப்டம்பர் மாதம் வரை, மேற்கண்ட எதிரிகள் 1 முதல் 9 வரை உள்ளவர்கள் திரு.வஜ்ஜிரவேலு, திரு.சீனிவாசன், திரு.ராஜேந்திரன் ஆகியோருடன் சேர்ந்து சென்னை ஆலந்தூர், நங்கநல்லூர் மற்றும் செங்கல்பட்டு ஆகிய இடங்களிலிருந்து போலியாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள், திட்ட அனுமதி, கட்டிட அனுமதி போன்ற ஆவணங்களை தயாரித்து அதன்மூலம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சிமெண்ட்டுகளை விதிமுறைகளை மீறி விநியோகஸ்தர்கள் மூலம் அதிக விலைக்கு விற்று குற்றச்செயலில் ஈடுபட்டு U/s.120(b) r/w.467, 468, 471, r/w 467 and 468, 420 IPC and under section-5(1)(a) and (d) r/w.5(2) of Prevention of Corruption Act.1947

சட்டப்பிரிவுகளின் படி தண்டிக்கத்தக்க குற்றங்களை புரிந்ததால் அவர்கள் மீது 15.05.1987 ந் தேதி இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

நீதிமன்ற நடவடிக்கையின் போது 5வது எதிரி திரு.டி.சுந்தரராஜன் காலமானார். மற்ற எதிரிகள் 8 பேர் மீது குற்றம் நிரூபிக்கப்படவில்லையென 16.04.2008-ந் தேதி கணம் கூடுதல் அமர்வு மற்றும் சிறப்பு நீதிமன்றம் எதிரிகளை விடுவித்தது. ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை சென்னை உயர்நீதிமன்றத்தில் இவ்வழக்கில் 29.04.2010 அன்று Crl.A.306/2010ன் கீழ் மேல்முறையீடு செய்தது. நீதிமன்ற நடவடிக்கையின் போது எதிரி திரு.நாராயணசங்கரன் 17.11.2020 ந் தேதி காலமானார்.

இருதரப்பு விவாதங்களுக்கு பிறகு 21.07.2023 அன்று கனம் திரு.வேல்முருகன், நீதியரசர், உயர்நீதிமன்றம் அவர்கள் அரசு ஊழியர்களான எதிரிகள் 2) திரு.என்.ராஜகோபாலன், வயது/71, முன்னாள் மார்க்கெட்டிங் மேனேஜரின் நேர்முக உதவியாளர் 3) திரு. பி.தாமோதரன், வயது/76, முன்னாள் அக்கவுணட்ண்ட், 4) திரு.எஸ்.ராமகிருஷ்ணன், வயது/68, முன்னாள் இளநிலை உதவியாளர் ஆகியோர் மீது U/s 120(B) r/w 467, 468, 471, r/w 467 and 468, 420, 109 r/w 467, 468, 471 r/w 467, and 468, 420 IPC and 5(1)(a) and (d) r/w 5(2) of Prevention of corruption Act-ன் கீழ் குற்றம் நிரூபிக்கப்பட்டதாக தீர்ப்பளித்து குற்றவாளிகள் மூவரும் தனித்தனியாக 4 ஆண்டுகள் கடுங்காவல் சிறைத்தண்டனையுடன் ரூ.5,000/- அபராதமும் செலுத்தவேண்டுமென தண்டனை விதித்தார். தனிநபர்களான மற்ற எதிரிகளை குற்றவாளிகள் இல்லையென விடுவித்து தீர்ப்பளித்துள்ளார். மேற்படி உத்தரவின் பேரில் எதிரிகள் மூவரும் 22.07.2023 தேதி அதிகாலை புழல் மத்தியசிறையில் அடைக்கப்பட்டனர்.

## PRESS NOTE

## Former Employees of TANCEM Convicted for allegations of malpractices in the distribution of imported cements

A Regular Case in Chennai, Vigilance and Anti Corruption, Special Investigation Cell in Cr.No.01/1984/AC/SIC was registered on 25.06.1984 against 1. Tr.Narayana Sankaran, Formerly Marketing Officer, Tamil Nadu Cements Corporation Limited, Chennai, 2. Tr.N.Rajagopalan, Formerly Personal Secretary to Marketing Manager, TANCEM, Chennai 3. Tr.P.Damodaran, Formerly Accountant, TANCEM, Chennai, 4. Tr.S.Ramakrishnan, Formerly Junior Assistant, TANCEM, Chennai, A-5 Tr.P.Sundararajan, A-6, Tr.T.Dhanasingh, A-7, Tr.Selvaraj, A-8, Tr.A.Lawrence @ Sundar and A-9, Tr.A.Vairavanathan (A-5 to A-9 are Stockiest and Private individuals) for the allegations of malpractices in the distribution of imported cements to the beneficiaries.

The Government of Tamil Nadu in G.O.Ms.No.819 Industries Department dt.06.03.1982 nominated TANCEM as an agency to import cement from abroad and in pursuance of the above G.O. The TANCEM had been imported cement from North and South Korea during the year 1982-1983. The imported cement was not for sale through stockiest. In Pursuance of the above policy, TANCEM invited applications accompanied by copies of the approved plans, Engineer's certificates regarding cement requirement and construction permission of municipality from Public from 03.03.1983 onwards. During the period from February 1983 to September 1983, A1 to A9 along with approvers Vajravelu, Srinivasan and Rajendran at Madras, Alandur, Nanganallur and other places in Chenglpattu District, prepared forgery records like applications for issue of cement, cement adequacy certificate, planning permissions and buildings plans etc., cheated TANCEM and obtained stocks of imported cements and committed the offences of criminal misconduct by public servants

in the discharge of their official duties, thereby A1 to A9 committed the offences U/s.120(b) r/w.467, 468, 471, r/w 467 and 468, 420 IPC and under section-5(1)(a) and (d) r/w.5(2) of Prevention of Corruption Act.1947.

On completion of investigation, the Charge Sheet was filed against the accused 1 to 9 on 15.05.1987. During the trial, A-5 Tr.P.Sundararajan died. The case against A-1 to A-8 was ended in acquittal on 16.04.2008 in the Hon'ble IV Addl. Session and Special Judge, Chennai and an appeal against acquittal was filed in Crl. Appeal No. 306/2010, dated: 29.04.2010 before the Hon'ble High Court of Madras. (A-1) Tr.Narayana Sankaran, Formerly Marketing Officer also died on 17.11.2020.

On 21.07.2023, Hon'ble Justice Mr.P.Velmurugan convicted the accused 2 to 4, each of the accused to undergo rigorous imprisonment for a period of four years for each of these offences and to pay a fine of Rs.5,000/- each, in default, to undergo rigorous imprisonment for a period of six months each for the offences U/s 120(B) r/w 467, 468, 471, r/w 467 and 468, 420, 109 r/w 467, 468, 471 r/w 467, and 468, 420 IPC and 5(1)(a) and (d) r/w 5(2) of Prevention of corruption Act.

The accused Tr.N.Rajagopalan, Formerly Personal Secretary to Marketing Manager, TANCEM, Chennai 3. Tr.P.Damodaran, Formerly Accountant, TANCEM, Chennai, 4. Tr.S.Ramakrishnan, Formerly Junior Assistant, were imprisoned in Central Prison, Puzhal, Chennai in early hours of on 22.07.2023.